# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ கார்த்திகை 1979 ★ இதழ் - 47





## விபுலாநந்த அடிகளார்

( 29-3-1892 — 19-7-1947 )

மில்க்வைற் செய்தி நாற்பத்தேழாம் இதழ் உருவாகும் வேளையில் நாட்டுக்கு நற்பணி புரிந்த அடிகளாரின் நினைவு நெஞ்சை நிரப்பிவிட்டது. அடிகளாரைப்பற்றி இதுவரை பலர் எழுதியும் பாடியும் புகழ்ந்தும் போற்றியுமுள்ளார்கள்.

ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் என்னும் தலைப்பில் ஈழத்தில் ஆக்கபூர்வமான உபகரிப்புச் செய்தவர்களைப்பற்றி நாம் தொடர்ந்து எழுதிவரும்போது விபுலாநந்த அடிகளாரைப்பற்றி வெளியிடுவதற்குச் சந்தர்ப்பம் நோக்கியிருந்தோம், நல்லவேளையில் அரசாங்கத்தார் அவர் நினைவாக முத்திரை வெளியிடப்போவதாக அறிவித்தனர். அதனுல் அந்த வைபவத்தில் எங்கள் மனநிலையைக் காட்டுவதற்கு இது வாய்ப்பாக அமையவே இவ்விதழை அடிகளார் பேரில் சிறப்பு மலராக வெளியிடுகிறேம். அவரைப்பற்றி அதிகம் எழுதிப் பெரிய மலராக வெளியிடுவதில் எமக்கு ஆர்வம் நிறையவுண்டு. ஆனுல் காகிதம் காலம் என்பனவற்றையுன்னிப் பெரிதாக வெளியிட முடியவில்லை. எனினும் எமக்கானவகையில் இதனை வெளியிடுகிறேம்.

அடிகளாரின் நினைவு வாழ்வதாகுக.



மரம் நாட்டு விழாவின்போது யாழ். ஹதிஜா முஸ்லீம் மகாவித்தியாலய அதிபருக்கு மில்க்வைற் அதிபர் மரக் கன்றுகளை அன்பளிப்புச் செய்கிறுர்.

**சுவாமி விபுலாநந்தர் சிறப்பு மலர்**

உ
சிவமயம்






திருநாவுக்கரசுநாயனர்

திருக்கடவூர் வீரட்டம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாலனுக் காயன்று பாற்கட லீந்து பணைத்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரண மோதி யருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்தபி ரான்கட வூருறை யுத்தமனே.

திருச்சிற்றம்பலம்

வியாக்கிரபாத முனிவருடைய அருமைத் திருக்குமாரராகிய உபமன்னியுமுனிக் குழந்தைக்காக அன்றொரு காலத்தில் திருப்பாற்கடலையே கொடுத்தருளியவரும், பெருத்து வளர்ந்த கல்லால மரநிழலில் அமர்ந்து வேதமோதியருளியவரும், பெரிய முனிவரான மார்க்கண்டேயரின் ஆவியைக் கவர்வதற்காகத் திரிசூலமும் பாசமுங்கொண்டு தொடர்ந்து ஓடிவந்த இயமனைக் கோபித்து உதைத்தருளிய பெரியபிரான் திருக்கடவூர் என்னும் திருவருள் நிறைந்த திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள உத்தமராவர்.




## இகல்

மாறுபடுதல்

**இகல் என்னும் எவ்வநோய் நீக்கின் தவவில்லாத் தாவில் விளக்கந் தரும்.**

மாறுபாடு என்னுந் துன்பத்தைச் செய்யும் நோயை ஒருத்தன் தன் மனத்தைவிட்டு நீக்கிவிடுவானாயின், அது அவனுக்கு அழிவில்லாத நிலையான புகழைக்கொடுக்கும்.

**Hatred**

If the distressing desease of disagreement with others be got rid of, it will result in the never decreasing and ever lasting fame.

## நவெம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | வியாழன் | — | பிரதோஷவிரதம்<br>ஹஜ்ஜிப் பெருநாள் |
| 3 | சனி | — | பூரணைவிரதம் |
| 5 | திங்கள் | — | கார்த்திகை விரதம் |
| 15 | வியாழன் | — | ஏகாதசிவிரதம் |
| 17 | சனி | — | சனிப் பிரதோஷவிரதம்<br>(கார்த்திகை மாதப்பிறப்பு) |
| 19 | திங்கள் | — | அமாவாசை |

## மில்க்வைற் மரம் நாட்டும் பணி

இவ்வாண்டு நல்லமுறையாக மழைபெய்து நிலம் வசதியாக இருந்ததால் குடாநாடெங்கும் நாங்கள் மரங்கள் நடுவதற்கு வெகுவாய்ப்பாக இருந்தது.

எம்மை இப்பணியில் வெகுவாக ஊக்குவித்து நாம் பணி செய்ய உடந்தையாயிருந்த பாடசாலைகள் பல. கோயில்கள் பல. சனசமூக நிலையங்கள் பல. பாடசாலைகளுள் பெருவிழாவெடுத்து மரம் நாட்டியவர்கள் ஒருசிலர்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி
வயாவில் மகாவித்தியாலயம்
இளவாலை கன்னியர் மடம்
முஸ்லிம் பெண்கள் மகாவித்தியாலயம்
மண்டைதீவு மகாவித்தியாலயம்
சுழிபுரம் ஆறுமுகவித்தியாலயம்
ஏழாலை மகாவித்தியாலயம்
மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி

## காரைநகரில் மரம் நாட்டும் பணி

காரைநகர் யாழ்ரன் கல்லூரி வளவிலும், கனிஷ்ட பாடசாலை வளவிலும், வயாவில் சைவ வித்தியாசாலை வளவிலும் மரம் நாட்டுவிழாவை மாணவர் மத்தியில் தொழிலதிபர் ஊக்குவித்துத் தாமே பல மரங்களை நாட்டிவைத்தார்.

## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவன வற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

★ கவலைப்படுகிறவன் ஒரு காரியத்துக்கும் உதவான் ★

# நாவலர் நினைவுகள்

முற்றொடர்:



ஆராய்ச்சிக் கந்தரின் கடைக்குட்டி மைந்தன் ஆறுமுகம்பிள்ளை 1822ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பதினெட்டாம் நாள் பிறந்தார். அந்நாள் சித்திரபானு வருடம் மார்கழி மாதம் ஐந்தாம் நாளான புதன் கிழமையாகும். அன்று அவிட்ட நட்சத்திரம் நிலவியது. வேளாண் மரபும் சைவப் பண்பாடும் பொருந்திய பெருங்குடியிற் பிறந்த பிள்ளையாதலால் அவருக்குச் செய்யவேண்டிய கருமங்களைத் தந்தை தாயர் குறைவறச் செய்தார்கள்.

பிள்ளைக்கு ஐந்தாம் ஆண்டு ஆனபோது அக்காலத்து முறைப்படி வித்தியாரம்பம் என்னும் ஏடு தொடக்குதல் மங்களகரமாக நடைபெற்றது. நல்லூரில் வாழ்ந்த சுப்பிரமணியம் என்னும் உபாத்தியாயர் பிள்ளைக்கு ஆரம்பக் கல்வி ஊட்டிவந்தார். பிள்ளை கல்வி கற்றலில் ஊக்கம் நிறைந்தவராய் ஆசிரியரிடம் ஔவையார் செய்த நீதி நூல்களை நன்ருகப் படித்துப் பாடமாக்கினுர். அக்காலத்து வழக்கப்படி நிகண்டு என்னும் பெயர்த்தொகை நூலையும் கற்றுச் சொல்வளத்தில் சிறந்து வந்தார். பின்னர் நைடதம், பாரதம், கந்தபுராணம் முதலாய நூல்களையும் சொல்லலங்காரம் நிறைந்த மறைசையந்தாதி முதலிய நூல்களையும் கற்றுவந்தார். அவர் படித்த நூல்களின் பாடல்களை மனனஞ்செய்துகொண்டதோடு அவற்றின் பொருளையும் நன்கு விளங்கிப் பழகிக்கொண்டார். தம்மோடு கூடப்படிக்கும் பிள்ளைகளுக்குத் தெரியாதனவற்றை விளக்கிவந்தார்.

தமது குட்டித் தம்பியார் மிகவுங் கெட்டிக்காரனுய்ப் படித்து வந்ததைக் கண்ட மூத்தண்ணு தியாகராசப்பிள்ளை அவர்மீது கொண்ட ஆசை காரணமாக அவரை மேலும் படிக்கவைப்பதற்கு விரும்பினுர். அக்காலத்தில் வேலாயுத முதலியார் என்பார் பெரிய படிப்பாளி. தியாகராசப்பிள்ளை தம்பியாரை அழைத்துச்சென்று முதலியாரிடம் ஒப்பித்தார். முதலியார் ஆறுமுகம்பிள்ளையையும் தம் மைந்தன் சம்பந்தன் என்பாரோடு இருத்திப் பெரிய நூல்களைச் சொல்லிக்கொடுத்தார். இலக்கியங்களோடு இலக்கணங்களையுஞ் சொல்லிக்கொடுத்தார்.

இன்று யாழ்ப்பாணத்து வேம்படி மகளிர் கல்லூரி இருக்கும் இடத்தில் முற்காலத்தில் பேர்சிவல் என்னும் வெள்ளைக்காரப் பாதிரியார் ஆண்களுக்குரிய ஆங்கிலப் பாடசாலையை நடத்திவந்தார். ஆறுமுகம்பிள்ளைக்கு பன்னிரண்டாம் வயதில் 1834ஆம் ஆண்டில் மூத்தண்ணு அவரைப் பேர்சிவல் பாதிரியாரிடம் அழைத்துச் சென்று ஆங்கிலம் படிக்கவைத்தார். அந்நாளில் இவர் C. ஆறுமுகம் என்று தம் பெயரை எழுதிவந்தார்.

ஆறுமுகம் சிறந்த விவேகியாதலால் ஆங்கில மொழியையும் விரைவில் கற்று அதில் திறமையுற்ருர். எதனையும் விரைவில் நன்ருகக் கற்கும் திறமைவாய்ந்த தம்பியாரை பெரியவர்களிடம் மேலும் படிக்கவைத்தல் வேண்டும் என்று மூத்தண்ணு விரும்பினுர்.

அக்காலத்தில் சரவணமுத்துப்புலவர், சேனுதிராய முதலியார் என்னும் பெரியவர்கள் இருவர் நல்லூரில் இருந்தார்கள். சரவணமுத்துப்புலவர் கூழங்கைத் தம்பிரான் என்னும் கனகசபாபதி யோகி ஒருவரிடம் கற்றுத் தேறிப் பெரிய புலவராய் இருந்தவர். சேனுதிராய முதலியார் என்பவர் இருபாலையைச் சேர்ந்தவர். அவருடைய தந்தையார் நெல்லைநாத முதலியார் என்பார் நினைவாற்றல் என்னும் ஞாபகசக்திக்குப் புகழ்பெற்றவர். எந்தப் பாடலையும் ஒருமுறை கேட்டால் அப்படியே பாடமாக்கக்கூடியவர். சேனுதிராய முதலியார் தமிழ், வடமொழி, ஆங்கிலம், ஒல்லாந்தம், போத்துக்கேயம் முதலிய பல மொழிகளை நன்கறிந்த பன்மொழிப் புலவர். அவர் யாழ்ப்பாணத்து நீதிமன்றில் பெரிய முதலியாராயிருந்தபோது கூழங்கைத் தம்பிரானிடத்தும் படித்து அறிவைப் பெருக்கியவர்.

சரவணமுத்துப் புலவர் மாதகல் என்னும் ஊரைச் சேர்ந்த மனப்புலி முதலியாரின் மைந்தர். இவர் சேனுதிராய முதலியாரிடத்தும் படித்து அறிவைப் பெருக்கியவர். கண்டனங்கள் எழுதுவதில் கைதேர்ந்தவர். தமிழ்நாட்டில் உள்ள களத்தூரில் வாழ்ந்த வேதகிரி முதலியார் என்பாரோடு அறிவுப்போட்டியில் ஈடுபட்டு உதயதாரகை என்னும் பத்திரிகையில் கண்டனங்கள் எழுதிவந்தவர்.

இத்தகைய பெரியவர்களிடம் தமிழ் கற்றுவந்த ஆறுமுகம் கோயில்களுக்குத் தவருமற்சென்று கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலிய புராணங்களுக்குப் பயன் சொல்லப் பழகி வந்தார். தமது ஆசிரியர் இருவரிடத்தும் நன்னூற் காண்டிகை, நன்னூல் விருத்தி முதலிய இலக்கணத்தையும்; இரகுவம்சம், திருக்குறள், திருக்கோவையார், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களையும் கற்றுத் தேறினுர்.


தமிழில் இலக்கண இலக்கிய சமய நூல்களை நன்ருகக் கற்று வந்ததோடு, ஆங்கிலப் பாடசாலையிலும் கிரமமாகப் படித்து மேல் வகுப்புக்கு வந்தார். இவருக்குப் பத்தொன்பதாம் வயதாகும்போது இவரின் கெட்டித்தனத்தை அவதானித்த பேர்சிவல் பாதிரியார், இவரை மேல் வகுப்புகளுக்குத் தமிழும், கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும் கற்பிக்கும் ஆசிரியராய் நியமித்தார். இவரின் இருமொழிப் புலமையையும் வியந்து தமக்குப் பண்டிதராக இருத்தினுர். இவர் தமக்கு மாணவராய் இருந்ததை மறந்து இவரைத் தமது குருவாகக் கொண்டார். ஆறுமுகம் அவர்கள் எவ்வித வேதனமும் பெருமலே ஆங்கிலப் பாடசாலையில் கற்பித்து வந்தார்.

— தொடரும்

## பிறந்தநாள் வாழ்த்தும் நன்றியும்

தொழிலதிபரின் பிறந்தநாள் 2-11-79இல் வருவதை அறிந்து முன்கூட்டியே தீபாவளி வாழ்த்துடன் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்தையும் அன்பர்கள், மாணவர், மாணவியர், ஆதரவாளர் அநேகர் அனுப்பியிருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் தனித்தனி நன்றி அறிவிக்கும்வரை பொதுவாக எல்லோருக்கும் அவர் தமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருர். ஏற்றுக்கொள்க.

★ பிறரைத் திருத்த முனைபவன் மிகப்பெரிய பேதை ★



முற்றொடர்....

## சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி

## II

சித்தாந்தத்தில் அறிவு நிலை கடந்த சமயவுண்மை உயிருக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பிற் கூறப்படுகிறது. வேதாந்தத்தைப்போலவே சைவசித்தாந்தமும் அத்வைத தத்துவம் என இடம்பெறுகிறது. ஆனால் அது இதனை வேறுவிதமாக விளங்கவைக்கிறது.

வேதாந்தம் சங்கராசாரியர் விளக்குவது போல இரண்டல்ல என்னும் கருத்தில் ஏகான்ம தத்துவமாகக் கூறும். சித்தாந்தம் அதனை ஒன்றுமல்ல, இரண்டுமல்ல எனக்கூறி, ஒரு நடுவழியைக் கூறும். அது சங்கராசாரியரின் ஏகான்ம வாதத்துக்கும் ஏனைய மகான்களின் துவைதத்துக்கும் இடையிலுள்ளதாகும்.

சைவசித்தாந்தக் கோட்பாட்டின் வண்ணம் ஆன்மா இறைவனோடு ஒன்றாயும் வேறாயும் உள்ளது. இதைப் பாலில் வெண்ணெய் போல எனவும், விறகில் தீ போல எனவும், பூவில் மணம் போல எனவும், பழத்தில் ரசம் போல எனவும், எள்ளில் எண்ணெய் போல எனவும் பலவேறு உதாரணங்களால் விளக்குவர். — தொடரும்


## பிறந்தநாள் விழா

தொழிலதிபர் கனகராசா அவர்களின் ஐம்பத்திரண்டாம் பிறந்தநாள் ஆலய வழிபாட்டுடன் அமைதியாக நடைபெற்றது. சென்ற 2-11-79 வெள்ளிக்கிழமை நெருங்கிய நண்பர்கள், உறவினர், தொழிலாளர் பங்குபற்றிய விழா காலையிலேயே ஆரம்பித்தது. அதிகாலை தொடக்கம் குடாநாட்டிலுள்ள ஆலயங்கள் பலவற்றை வலம் வந்து வழிபட்டபின், அந்தணப் பெரியாரான பிரம்மஸ்ரீ ஆனந்த நடேசக் குருக்கள் அவர்களையும், கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களையும் சென்று வணங்கி ஆசி பெற்றார்.

பிற்பகல் நடைபெற்ற வைபவத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றி ஆசிவழங்கியவர் சிற்பாசாரியர் தேவலிங்கம் அவர்களாவர். குடாநாட்டிலுள்ள இந்துசமய மன்றங்கள், சனசமூக நிலையங்கள் பலவற்றின் பிரதிநிதிகளாக வந்திருந்தோரும், கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையினரும் ஆசியுரை வழங்கினார்கள். யாழ். திவ்விய ஜீவன சங்கம், கொக்குவில் இராமகிருஷ்ண சாரதாதேவி நிலையங்களைச் சேர்ந்தவர்கள் பிரார்த்தனைப் பாடல்கள் பாடினார்கள். மெல்லிசைக் குழுவினர் றமேஸ் வைகுந்தவாசன் தலைமையில் இசைமாரி பொழிந்து சபையோரை மகிழ்வித்தனர். நண்பர்கள் சார்பில் 52 நீதிகள் பொதிந்த ''அமர நீதிகள்'' என்னும் நூலை அன்பர் ஒருவர் வெளியிட்டு வைத்தார். தொழிலாளர் சார்பில் மலர்ந்த மலரைப் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வெளியிட்டு வைத்தபோது வர்த்தகர் சின்னத்துரை அவர்க்ள் முதற்பிரதியைக் கையேற்றார்.

## பண்டத்தரிப்பில் பெருவிழாக்கள்

சென்ற திங்கள் பண்டத்தரிப்புப் பெண்கள் கல்லூரியில் இரு பெரு விழாக்கள் நடைபெற்றன. பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி பெற்று மீண்டுள்ள செல்வி பொன்னையா என்பவர் இக்கல்லூரிப் பழைய மாணவிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கான வகுப்பை மில்க்வைற் தொழிலதிபர் ஆரம்பித்துவைத்தார். இதற்கு உதவியாக வழி வகுத்தவர் தொழில் முன்னிலைப்பாட நெறிக் கல்வி அதிகாரி திரு. இராமநாதன் அவர்களாவர். பெற்றார் அயலவர் முதலானோர் பலர் சமுகமளித்துச் சிறப்பித்த வேளையில் நாவலர் விழாவும் நல்ல முறையில் நடைபெற்றது. மரம் நாட்டும் பணியை ஊக்குவிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் திரு. றமேஸ் வைகுந்தவாசன் மெல்லிசைப் பாடல்கள் பாடி மகிழ்வித்தார்.



## யோசேப் அவர்களின் மறைவு

முன்னாள் யாழ்ப்பாணத்து அரசாங்க அதிபராகவும், மாநகரசபையின் விசேட ஆணையாளராகவும் வேலைபார்த்த யோசேப் அவர்கள் விசாலமான மனம் படைத்தவர். தங்கமான மனிதர். அவர் யாழ்ப்பாணத்து ஆஸ்பத்திரி வீதியை அழகு செய்வதற்காக நிழல் தரும் மரங்கள் பலவற்றை மில்க்வைற் தொழிலதிபரைக் கொண்டு நடச் செய்தவர். அந்த மரங்கள் யாவும் அவர் மனம்போல் வளர்ந்து நிழல்செய்யத் தொடங்கிவிட்டன. அம்மரங்கள் அவர் தக்கார் என்பதைக் காட்டி நிற்கும் அவர் எச்சமாகும். அவை அவர் பெயரால் எஞ்சி நிற்கின்றன. அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள்.

கெட்ட சங்கம், புகைபிடித்தல், ஊனுணவு, வெறியூட்டும் குடிவகை முதலியவற்றை விலக்குக. யாதேனும் தீயபழக்கத்தை வளர்க்காதீர்கள். இடைவிடாத சத்சங்கம் பெற்றிருக்குக. — சுவாமி சிவானந்தர்

★ வறுமையில் செம்மையாக வாழ்தலே நாகரிகம் ★

முற்றொடர் :



# சூரிய நமஸ்காரம்

நீல மயிலில் செவ்வேள் என்னும் கோலக்குமரன் எழுந்தருளி வருகின்ற அற்புதக் காட்சியை விளக்குவதற்கு முயன்ற நக்கீரர் எடுத்தளடுப்பிலேயே உலக முவப்பவல னேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறை உவமை கூறுகின்றார்.

பொன்னம்பலத்திலே செஞ்சடைகளைத் திசை முகங்கள் அலம்புமாறு விரித்து அற்புதக் கூத்தாடுகிற சிவபெருமானை நினைவு செய்கிற தாம் வானத்தில் பொற்கிரணங்களாய கதிர்களைப் பரப்பி நடனமிடும் சூரியன். இதனைக் கம்பர் அழகாகப் பாடியுள்ளார்.

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப வேலையென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கில்
நடம்புரிவான் இரவியான
கண்ணுதல் வானவன் கனகச் சடைவிரித்தால்
எனவிரித்த கதிர்க ளெல்லாம்.

— தொடரும்

## கருகப்பிலைக் கன்றுகள்

கருகப்பிலை வடை, தோசை, சுண்டல் முதலிய உணவுகளுக்கும், பலவித கறிகளுக்கும் மணம், குணம், சுவையுண்டாக்கும் அரிய பச்சிலை என்பதை எவரும் அறிவர். இன்னும் அது அரிய மூலிகையாயும் இருக்கிறது. உடலாரோக்கியத்துக்கு அதனைச் சம்பலாக அரைத்தும் உண்ணலாம்.

மில்க்வைற் தொழிலகத்தில் உங்களுக்குத் தேவையான கருகப்பிலைக் கன்றுகளைப் பெற்று வீட்டுத் தோட்டங்களில் உண்டாக்குங்கள். அது வரண்ட பயிர். எங்கும் நன்றாக உண்டாகும்.

முற்றொடர்:

# இலக்கியச்சொல்

(அ. கு.)

| | | |
|---|---|---|
| இரக்கை | — | காத்தல், திருநீறு |
| இரச்சு | — | கயிறு, பின்னல் |
| இரசனி | — | மஞ்சள், இரவு |
| இரட்டல் | — | வீசுதல் |
| இரணம் | — | பொன், யுத்தம் |
| இரற்று | — | ஒலி |
| இராவணம் | — | அழுதல் |
| இரிதல் | — | கெடுதல் |
| இருது | — | பருவம் |
| இல்லி | — | துவாரம் |
| இலக்கியம் | — | காப்பியம் |
| இலகு | — | நொய்மை |
| இலச்சினை | — | அடையாளம், மோதிரம் |
| இலட்டுகம் | — | மோதகம் |
| இலம்பாடு | — | வறுமை |
| இல்லாடம் | — | நெற்றி |
| இலவங்கம் | — | கிராம்பு |
| இலிபி | — | எழுத்து |
| இவண் | — | இவ்விடம் |
| இவறல் | — | மறப்பு, விருப்பம் |

— தொடரும்

## சமூகத்தொண்டரின் மறைவு

குடாநாட்டின் சமூகத்தொண்டரும் சைவத்தமிழபிமானியுமான முருகேசம்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் காரியாதிகாரியாகவும், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியவர். தம்மளவில் அவர் பொதுத் தொண்டு செய்வதில் தளராத ஊக்கம் உள்ளவர். அவரைப்போல உறுதியான போக்குள்ள தொண்டர்களைக் காண்பது அரிது. நாள்தோறும் நல்லூர்க் கந்தசுவாமிக் கடவுளை வந்து தொழுவதில் அவர் தவறுவதில்லை. அவர் செய்த தொண்டுகள் பலவும் அவரைப்பற்றி எதிர்காலத்தவருக்கு எடுத்துக் கூறிக்கொண்டே நிற்கும். அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

## ஒரு நற்செய்தி!

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சைவசமய பாடத்திலும், உயர்தர பரீட்சையில் இந்து நாகரிகப் பாடத்திலும் டிஸ்ரிங்சன் என்னும் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுள் இதுவரை எமக்கு விபரம் அனுப்பியவர்களுக்கு மாத்திரம் எமது சான்றிதழ், பரிசு என்பன தயாராகின்றன. ஆண்டு முடிவதற்குமுன் அவை உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

★ சத்தியம் என்பது ஒருவரின் தனியுடைமை அன்று ★

முற்றொடர்:

## அடுக்குமொழி

தேங்கனி மாங்கனி
தேடித் தேடி
தேய்ந்து நைந்து
தேய்ந்து மெலிந்து
தேர்ந்து தெளிந்து
தேம்பித் தேம்பி
தேறித் தெரிந்து
தேனும் பாலும்
தொகுத்தும் விரித்தும்
தொடுத்து மடுத்து
தொல்லை தொந்தரவு
தோப்பு துரவு
தோட்டம் துரவு
நகைப்பும் சிரிப்பும்
நகை நட்டு
நசுக்கி பொசுக்கி
நஞ்சான் குஞ்சான்
நடுங்கி ஒடுங்கி
நடை யுடை
நம்பிக்கை நாணயம்
நயந்து வியந்து
நய நட்டம்
நரைத்து வெளுத்து
நரை திரை

— தொடரும்

## அருள் விருந்து

ஆதாரம்: **தர்மசக்கரம்**

அன்பு ஓங்கும்போது அச்சம் அகன்றுவிடுகிறது.
ஒழுக்கத்தின் அழகு உடல் முழுதும் பிரதிபலிக்கிறது.
துக்கம் தீயசெயலிலிருந்து தோன்றுகிறது.
மனதை அழுக்குப் படுத்துவது பொருந்தாத ஆசை.
நம்பிக்கை உள்ளவனிடம் ஞானம் உதிக்கிறது.
முக்திக்குக் காரணமாயிருப்பது மனது.
தன்னைத் தானே திருத்திக்கொள்ளுதல் மகத்தான செயல்.
இனிமை இறைவனின் அறிகுறியாகும்.
தற்பெருமையும் பேராசையும் பதைபதைப்புக்குக் காரணம்.
மெய்யறிவு ஓங்குமளவுக்கு பேரின்பம் அதிகரிக்கும்.
நல்லறிவைத் திரிவுபடுத்தினால் கபடமாகிவிடும்.

### மநுதர்மம்


**விருந்து செய்யக்கூடாத விடுகள் மனைகள்:**

பாசாங்குக்காரன் வீடு, உபசரிப்பு இல்லாத இடம், தும்மல் துகள் பட்ட உணவு, வேட்டைநாய் உள்ள வீடு, மானங்கெட்டவள் வீடு, வட்டியால் பிழைப்போன் வீடு.

மெய்ப்பொருள் உணர்தலின் சிறப்பு

தண்ணீர், சோறு, பசு, நிலம், ஆடை, பொன் இவற்றைக் கொடுப்பதிலும் மெய்ப்பொருள் உணர்த்தல் மேலான கொடை.

முற்றொடர்:



## பஞ்ச தந்திரம்

உற்சாகமும் ஆண்மையும் உள்ளவன் எதிரியை வெல்வது சுலபம்.

காணாமற் போனதையும் செத்துப் போனதையும் காலங்கடந்து போனதையும் நினைத்து அறிவாளிகள் துயரப் படுவதில்லை.

ஆபத்தில் உதவுகின்றவன் நண்பன். அன்னம் அளிப்பவன் தந்தை. நம்பிக்கையானவன் தோழன். திருப்தி செய்பவள் மனைவி.

அன்பும் அறவாழ்வும் சாஸ்திர ஞானமும் குணமும் அறிவும் படைத்தவர்கள் போடும் திட்டங்கள் வீண் போவதில்லை.

யாருக்கு அநுபவம் அதிகமோ அவனே கிழவன். கிழவரின் பேச்சைக் கேட்டு நடத்தல் வேண்டும்.

ஏழைகள் எப்போதும் மறைவாகவே தங்கள் உணவைச் சாப்பிடவேண்டும்.

நல்ல குலத்திற் பிறந்து திறமையும் விசுவாசமும் உள்ள ஊழியனை அவமானப்படுத்தக்கூடாது.

குரூரனும் துஷ்டனுமான ஊழியனை நீக்காவிட்டால் அவன் செய்கின்ற காரியங்களுக்கு எஜமானன்தான் கஷ்டப்படவேண்டும்.

நன்றாகத் தோற்றுவித்த பிளவு, திடசித்தமுள்ளவர்களையும் கலக்கி விடுகிறது. திரும்பத் திரும்ப வெள்ளம் பாய்ந்து மோதினால் கற்பாறையும் பிளந்துவிடுகிறது.

— தொடரும்

## பாராட்டுகிறோம்

மிருசுவிலைச் சேர்ந்த தம்பு விஜயானந்தன் எனும் இளைஞர் மில்க்வைற் அதிபரின் மரம் நாட்டும் பணிக்கு தன் அன்பளிப்பாக 1000 பனம்விதைகளையும் 120 மர முந்திரிகைக் கன்றுகளையும் உபகரித்துள்ளார். அவ்விளைஞர் தன்னிடம் மிகுதியாக உள்ள மரங்களைப் பலரும் பயன் பெற வழிசெய்துள்ளார். பரந்த மனமும், ஆர்வமுமிக்க தம்பு விஜயானந்தனைப் பாராட்டுகின்றோம். ஏனைய இளைஞர்களும் அவ்வண்ணம் பின்வற்றுவார்களாக.

★ நிறைமொழிக்குப் பிறப்பிடம் தூய்மை ★

# சுவாமி விபுலாநந்தர்

விபுலாநந்த அடிகளார் கிழக்கு மாகாணத்தில் உதித்த சுடரொளி. அவர் பல துறைகளிலும் பிரகாசித்தவர். பல மொழிகளை நன்கறிந்தவர். பன்னாட்டு நாகரிகங்களைப் படித்தறிந்தவர். பரம்பரைக் கல்வி, பயிற்றப்பட்ட கல்வி, பட்டத்துறைக் கல்வி ஆகிய வரன் முறைகளில் உருவான வர். மொழிக்கும் சமயத்துக்கும் நாட்டுக்கும் முறையாக உபகரித்தவர். உழைப்பாற்றல் மிக்கவர். இருபெரும் பல் கலைக்கழகங்களில் முதன் முறையாகத் தமிழ்ப் பேராசிரியர் பதவியை மதிப்புடன் வகித்தவர். தம்மைப்போன்ற கல்வி மான்கள் பலரை உருவாக்கியவர். எல்லோரோடும் எளிதிற் பழகும் இனிய சுபாவம் உள்ளவர்.

கட்டுரைகள், பாடல்கள், மொழி பெயர்ப்புக்கள் பல செய்தவர். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழ்த் துறைபோன வித்தகர். பாடசாலைகள் கண்டவர், அநாதர்களுக்கு ஆதரவளிக்கும் புகலிடம் அமைத்தவர். அவருடைய கட்டுரைகள் எண்ணிலடங்கா. அவற்றைச் சிலர் பல நூல்களாகத் தொகுத்துள்ளார்கள். அவர் நாடகத்துறையை விளக்கி மதங்கசூளாமணி செய் தவர். ஆங்கிலத்தில் சேக்ஸ்பியரின் நடையினைத் தமிழ் நடையாக்கியவர். துள்ளலோசையொலிக்கும் பாடல்களை ஓசை மாறாமல் மொழி பெயர்த்தவர்.

யாழ்ப்பாணத்தின் பெயர்க் காரணமான பழைய யாழை அரிதின் ஆராய்ந்து அறிந்து உருவிலமைத்தவர். ஆதி யாழ், பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டு யாழ் என்பனவற்றைத் தேர்ந்தறிந்தவர். பயிற்றப்பட்ட விஞ் ஞான ஆசிரியராய்ப் பட்டம்பெற்ற விஞ்ஞானியாயிருந்த வருக்கு ஒலியைப்பற்றி அறிதல் விளையாட்டாயிருந்தது. அந்த விளையாட்டில் ஈடுபட முடியாது பிறர் தயங்கிய போது, தாம் துணிந்து புகுந்து சிறந்துவிளங்கியவர். யாழ் நூல் ஒன்றே அவரைக் கலாநிதி பட்டத்துக்கு அப்பாற் கொண்டுபோய்விட்டது. துறவியாய அவரை அளவிடும் பட்டங்கள் ஒளி செய்யா.

அடிகளார் இலங்கையிலும் பாரத நாட்டிலும் பணி புரிந்தவர். பாரத நாட்டில் மிக வடக்கேயுள்ள இமயஞ் சார்ந்திருந்து இமயமளவு பெரும் பணிபுரிந்தவர். பிரபுத்த பாரதம், இராமகிருஷ்ண விஜயம், வேதாந்தகேசரி என்னும் சஞ்சிகைகளோடு மிகமிக நெருக்கமான தொடர்பு கொண்டு பணிபுரிந்தவர். பிரபோத சைதன்யர் என்னும் திருநாமத் துக்கு இலக்காக வாழ்ந்தவர். பலருக்கு வாழும் வழியை வகுத்துக்காட்டியவர். அவர் துறவறம் பூண்டு விபுலாநந் தர் எனத் திருநாமம் பெற்றவர்.

### பிறப்பும் இளமையும்

இலங்கையில் கிழ்மாகாணம் என்னும் கிழக்குப் பிர தேசத்தில் மட்டக்களப்புமாவட்டத்தில் காரைதீவு என்னும் ஊர் உண்டு. அங்கே வாழ்ந்த சாமித்தம்பியார் கண் ணம்மையார் என்னும் தந்தை தாயருக்கு 29-3-1892 இல் ஓராண்குழந்தை பிறந்தது. பெற்றோர் பிள்ளைக்கு மயில் வாகனம் என்று பெயரிட்டனர்.

மயில்வாகனம் உரியகாலத்தில் குஞ்சித்தம்பி ஆசிரிய ரிடம் முதலில் கல்வி கற்றார். பின்னர் வசந்தராசபிள்ளை, சிவகுருநாதபிள்ளை ஆகியோரிடமும் பயின்றார். அக்காலத் தில் காரைதீவுப் பிள்ளையார் கோயிலில் பெரிய குருக்களா யிருந்தவர் வைத்திலிங்க தேசிகர். அவர் யாழ்ப்பாணத்துப் புலோலி ஊரைச்சேர்ந்தவர். பெரிய படிப்பாளி. தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிப்புலமை பெற்றவர். அவர் தக்ஷிணகைலாச புராணம் என்னும் பழைய நூலைப் பதிப் பித்துப் புகழ்பெற்றவர். அவர் காரைதீவுச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்தவர். மயில் வாகனம் வைத்திலிங்க தேசிகரிடம் வடமொழி கற்று வந்தார். வேறு பல பெரிய நூல்களையுங் கேட்டறிந்தார்.

மயில்வாகனம் விவேகமும் நல்லொழுக்கமும் வாய்ந்த மாணவன். அவர் தமது ஆசிரியர்களிடம் விசுவாசம், மரியாதை, அன்பு, பக்திபூண்டவர். ஆசிரியரைத் தெய்வம் என வணங்கும் வழக்கம் உள்ளவர். தமக்கு எழுத்தறி வித்த குஞ்சித்தம்பி ஆசிரியரை வணங்கி இளமையிலேயே செய்யுள் செய்தார். எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.

அம்புவியிற் செந்த மிழோ
டாங்கிலமும் எனக்குணர்த்தி அறிவுதீட்டி
வம்புசெறி வெண்கமல
வல்லியருள் எனக்கூட்டி வைத்த குஞ்சுத்
தம்பியெனும் பெயருடையோன்
தண்டமிழின் கரைகண்ட தகைமையோன்றன்
செம்பதும மலர்ப்பதத்தைச்
சிரத்திருத்தி எஞ்ஞான்றும் சிந்திப்பேனே.

### கல்லூரிப் படிப்பும் ஆசிரியர் பணியும்

மயில்வாகனம் தமது பத்தாம் வயதில் 1902ஆம் ஆண் டில் கல்முனை மெதடிஸ்த மிசன் பாடசாலையில் சேர்ந்து நான்காண்டுகள் பயின்றார். பின்னர் 1906ஆம் ஆண்டில் மேல் வகுப்புகளுள்ள மட்டக்களப்பு செண்.மைக்கல் கல்லூரி யிற் சேர்ந்தார். அங்கே தமது பதினாறுவது வயதில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்திபெற்றார். திறமை யாகத் தேர்வில் சித்திபெற்ற இவர் சிலகாலம் அங்கே ஆசிரியராகப் பணிபுரிந்தார். இதற்குள் 1911ஆம் ஆண் டில் அன்னை கண்ணம்மையார் காலமாகவே, இவர் தம தூருக்குச் சென்று அண்மையில் உள்ள பாடசாலையில் ஆசிரியராய் இருந்தார்.

### பயிற்றப்பட்ட ஆசிரியர்

மயில்வாகனனார் பயிற்றப்பட்ட ஆசிரியராக விரும்பிக் கொழும்புக்கேகி 1911 தொடக்கம் ஈராண்டுகள் பயிற்சி பெற்றார். பயிற்சி முறைகளை வெள்ளைக்காரப் பேராசிரியர்

களிடம் பெற்றார். பயிற்சிக்காலத்தில் சின்ன யாழ்ப்பாணம் என்னும் வெள்ளவத்தையில் தமிழ்ப் பிரமுகர்களான தென்கோவை கந்தையாபிள்ளை, நல்லூர் சிற். கைலாசபிள்ளை, சி. தாமோதரம்பிள்ளை முதலானோருடன் தொடர்பு கொண்டு பழந்தமிழிலக்கியங்களான சங்க நூல்களை நன்கு கற்று விற்பத்திமானுனர். ஈராண்டுப் பயிற்சி பெற்றபின் 1913ஆம் ஆண்டு முதல் சிலகாலம் சென். மைக்கல் கல்லூரியிலேயே மீண்டும் ஆசிரியராயிருந்தார்.

### விஞ்ஞான ஆசிரியப் பயிற்சி

அக்காலத்தில் கொழும்பில் விஞ்ஞான ஆசிரியர்க்கென ஒரு பயிற்சி அளிக்கப்பட்டது. மயில்வாகனனுர் அதனைப் பெற விரும்பி 1915ஆம் ஆண்டுமுதல் அத்துறை பயின்று 1916ஆம் ஆண்டில் நடந்த தேர்வில் முதன்மையாகத் தேறினர். அதனல் அவருக்கு டிப்ளோமா என்னும் பட்டம் கிடைத்தது.

### பண்டிதர் மயில்வாகனனுர்

முன்னரே தமிழில் ஈடுபாடு கொண்டிருந்தவருக்கு வெள்ளவத்தைப் பெரியவர்கள் ஊட்டிய தமிழ்ச்சுவை அவரைப் பண்டிதப் பரீட்சையைப் பதம்பார்க்கும் வண்ணம் ஊக்கியது. அவர் 1916 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டித பரீட்சைக்கு எழுதி அதில் தேறி இலங்கையில் பரீட்சை எடுத்த முதற் பண்டிதராயினர்.

### உதவி விரிவுரையாளர்

பண்டிதர் மயில்வாகனனுர்க்கு இருபத்துநான்கு வயதுக்குள்ளாகவே பட்டங்கள் பல கிடைத்திருந்தன. அவற்ருல் மிகப்பெரிதும் கணிக்கப்பெற்ற அவர் 1916-ஆம் ஆண்டில் கொழும்பிலிருந்த அரசினர் பொறியியற் கல்லூரியில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்று, இரசாயனம் போதித்து வந்தார். அப்பாடத்தின் ஆய்வுப் பகுதிகளில் மாணவர்களைப் பெரிதும் ஈடுபடுத்திப் பயிற்சியளித்துவந்தார்.

### யாழ்ப்பாணத்திற் பணி

அக்காலத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி முகாமையாளர் கொழும்பிற் செல்வாக்கு மிக்கவராயிருந்தனர். அவர்கள் மயில்வாகனனுரின் திறமையை அறிந்து அவரை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் விஞ்ஞான விரிவுரையாளராக நியமிப்பதற்கு வழிவகுத்தனர். அவரும் யாழ்ப்பாணத்தைப் பெரிதும் விரும்பி இங்கே வந்து. 1917ஆம் ஆண்டில் பதவியேற்ருர். அவர் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் படிப்பித்தபோது கந்தமடத்தின் அண்மையிலுள்ள ஆனைப்பந்திச் சந்தியில் அமைதியான வீடொன்றில் வாழ்ந்து வந்தார். அயலில் வைத்திலிங்கனுர் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்தனர். அவர் கோவையிலக்கியத்தில் நாணிக்கண் புதைத்தல் என்னும் துறையில் நூறு பாடல்கள் பாடிய புலமையாளர்.

மயில்வாகனனுர்க்கு ஆனைப்பந்தியில் வாழ்ந்த ஆசைப்பிள்ளை குடும்பத்தார் பழக்கமாயினர். சுந்தரம் ஆசைப்பிள்ளை பிற்காலத்தில் பலாலி ஆசிரிய கலாசாலையை அலங்கரித்தவர். விஜயம் ஆசைப்பிள்ளை பரமேஸ்வராக் கல்லூரியில் உப அதிபராயிருந்தபின், யாழ். இந்துக்கல்லூரியில் அதிபராயிருந்தவர். ஆனைப்பந்தியில் வாழ்ந்த பெரியவர்கள் வரிசையில் சாதாரண மனிதர். ஒருவரை எல்லோரும் கவணர் என்று வழங்குவர். அவர் பெயர் சோமசுந்தரம். அவர் பரோபகாரி. அவர் மயில்வாகனனுருக்குக் கூட்டங்களில் பேச வழிகாட்டியவர். கவணர் என்பவர் பிரசித்தி பெற்ற போல்பீரிசுக்கும் குரு.

மயில்வாகனனுர் ஒருமுறை வேலணையில் பேச வேண்டியவராயினர். அக்காலத்தில் தோணிப் போக்குவரத்து மாத்திரம் நிலவியது. பெரியகோயில் பள்ளி உபாத்தியாயர் என்றதால் தோணிக்காரர் பலர் மயில்வாகனனுரை வெகுவாக மதித்தார்கள். அன்ருெருநாள் மாலை நடைபெற்ற கூட்டத்தில் பேசியபின் இரவிரவாக மீண்டு வரத்தக்கதாக மயில்வாகனனுர் தோணி ஒன்றை ஒழுங்கு செய்தார். வேலணையில் நடைபெற்ற கூட்டத்தைப் பார்ப்பதற்கு ஓடக்காரனும் மயில்வாகனனுரைப் பின்தொடர்ந்து சென்று சபையிலிருந்து கேட்டான். கத்தோலிக்க மதத்தவனுயினும் சுத்த சைவப் பேச்சைக் கருத்தூன்றிக் கேட்டு உவந்தான். கூட்டம் முடிந்தபின் அவன் பெரியவரைப் பக்குவமாக மீட்டுவந்தான். பெரியவர் அவனுக்குரிய காசு கொடுப்பதற்கு எடுத்தபோது, அவன் வாங்க மறுத்துத் தான்கேட்ட பிரசங்கத்தின் மகிமையைப் பாராட்டினன். மயில்வாகனனுரின் மனம் வெகுவாக இளகிவிட்டது அவனுடைய பரிசுத்தமான இதயத்தைப்பற்றிப் பலருக்குங்கூறி வியந்தார்.

### காவிய பாடசாலையில் பயின்றவர் பண்டிதர் மயில்வாகனனுரைக் கண்டமை

ஆறுமுகநாவலர் தரும பரிபாலனத்தின் பகுதியாக அக்காலத்தில் நாவலர் பாடசாலையில் காவிய வகுப்பு நடைபெற்றது. சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் வகுப்பு நடத்திவந்தார். இன்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்று புகழ்மணக்க எண்பதாம் ஆண்டு நிறைந்துள்ள எங்கள் ஆசிரியப்பிரான் அன்று பதினெட்டாண்டு மாணவனுய் முதன் மாணவனுயிருந்தார். வட்டுக்கோட்டை குருமூர்த்தி ஐயர் முதலானேர் அவ்வகுப்பில் படித்தார்கள். மட்டக்களப்புப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் சிலகாலம் அவ்வகுப்பிற் கற்றதுண்டு.

மட்டக்களப்பு மாணவருக்கு மட்டக்களப்புப் பெரியார் இங்குள்ளார் என்று நண்பர்கள் கூறினர்கள். அவரைப் பார்த்துவருவதற்கு அவர்கள் ஆனைப்பந்திக்கு வந்தார்கள். புலவர்மணி முதன்முதலாகப் பண்டிதர் மயில்வாகனனுரை இங்கேதான் கண்டு வணங்கினர்கள். அவரைக் காண வழிவகுத்தவர் கவணர் என்ற சோமசுந்தரக் கிழவனர்.

### லண்டன் பல்கலைக்கழகத்து பி. எஸ். சி. பட்டம்பெற்ற விஞ்ஞானப் பட்டதாரி

பண்டிதர் மயில்வாகனனுர் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் பணிபுரிந்து மாணவர்களை மனிதராக்கி வந்த காலத்தில், தாமும் தம் மேற்படிப்புக்கான முறையிற் கற்றுக் கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களில் பட்டதாரியானர். அதனல் இவர் புகழ் குடாநாடெங்கும் பரவியது.

### யாழ்ப்பாணத்தில் படித்தவர்களுடன் பழகிக்கொண்டமை

படித்தவர்கள், பண்பட்டவர்களுடன் பழகியொழுகுவதைப் போன்ற பாக்கியம் வேறில்லை என்னும்படிக்

சமைய மயில்வாகனனுருக்கு யாழ்ப்பாணத்துப் படித்த பெரியவர்கள் பலரின் நட்புக்கிடைத்தது. அக்காலத்தில் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்களாயிருந்த வைரமுத்து, மயில்வாகனம், மகாலிங்கசிவம், நவநீத கிருஷ்ணபாரதியார் முதலானோரை இவர் நன்கறிந்தார். இவர்களுக்கு யோகசுவாமிகளின் தரிசனமும் உபதேசமும் இடையிடை வாய்ப்பதுண்டு. அக்காலத்தில் எழுச்சியுற்ற இந்து வாலிபர் சங்க விழாவொன்று கோலாகலமாகக் கீரிமலையில் நடைபெற்றது. அதில் மட்டக்களப்பு மயில்வாகனனுரும் நவநீதகிருஷ்ணபாரதியாரும் பெயர் பெற்றனர். நவநீத கிருஷ்ண பாரதியார் பெரிய படிப்பாளி. அவர் பிற்காலத்தில் பரமேஸ்வராக்கல்லூரியில் ஆங்கிலமயமாயிருந்த மாணவர்களைச் செந்தமிழன்பர்களாக மாற்றியவர். அவர் உலகியல் விளக்கம் என்னும் உயரிய நூல் செய்தவர். அதனைப் பண்டிதர் மயில்வாகனனர் உவந்து ஏற்றுப் பதித்துப் பாடிய பாடல்கள் பல. நினைவிலுள்ள சில வரிகள் பின்வருமாறு.

உலகிற் சிறந்த உலகியல் விளக்கம்
அதனினும் சிறந்தது இன்ப நெறியியல்
அதனினும் சிறந்தது முல்லைப்பாட்டு
அதனினும் சிறந்தவை கண்ணனைப்பாடிய
பதின் மூன்றடிகள்........

### மானிப்பாயில் அதிபர்

மயில்வாகனனரின் பெருமையை அறிந்த கொழும்புச் சைவப் பெரியார் திருவிளங்கம் என்பார், தனது முகாமையில் நடைபெற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இவரை அதிபராக நியமித்தார். இவர் 1920ஆம் ஆண்டில் அப்பதவியை ஏற்று வகித்த காலத்தில், தம்முடைய பழைய நண்பர்களை இராமநாதன் கல்லூரிக்கு அண்மையில் உள்ள ஒருவீட்டில் சந்தித்து உரையாடுவது வழக்கமாயிருந்தது.

### யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்

யாழ்ப்பாணத்தில் முன்னர் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் முதலானோர் கண்ட தமிழ்ச் சங்கம், சேர். அருணசலம் முதலானோர் கண்ட செந்தமிழ்ப் பரிபாலன சங்கம் என்பன தமிழ்நாடு, மலேசியா, தென்னுபிரிக்கா, பர்மா முதலான நாடுகளிலேயும் புகழ்பெற்று நிலவியவையாகும். மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தைப் பெரும் புலவர்கள் நிறுவுவதற்கு வழிகாட்டியாயியங்கியது குமாரசுவாமிப் புலவர் அவர்கள் கண்ட தமிழ்ச்சங்கமேயாம்.

அந்தப்பெருமைகளையெல்லாம் நம்மவர் போட்டடித்த பின், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் எழுந்தது. அதனை பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள் இயக்கிவந்தார். அது தமிழையும் சமஸ்கிருதத்தையும் வளர்த்ததோடு நாட்டில் மூலைமுடுக்கெங்கும் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்றித்திறத்தவரை உருப்படியாக்கி வந்தது. இந்தச் சங்கம் இங்கு ஆரம்பமானபோது மட்டக்களப்பு மயில்வாகனனுரும் பெருமளவில் அயராதுழைத்தார்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தமிழையும் சமஸ்கிருதத்தையும் வளர்ப்பதற்கான திட்டங்களை வகுத்த மயில்வாகனனர் படித்தவர்களை உருவாக்குவதற்குப் படிமுறையில் பரீட்சைகளை நடத்தவும் திட்டந்தீட்டினர். ஆசிரியர், இளம்பேராசிரியர், பேராசிரியர் என்ற தகுதிகள் பரீட்சைகள்மூலம் உண்டாக்கப்படவேண்டும் என்பது அவர் விருப்பம்.

### துறவுபூணல்

மயில்வாகனனர் முன்னர் 1916-ஆம் ஆண்டளவில் உலகில் நிலவிய நெருக்கடிகாரணமாக நாட்டுக்குப் பெருமளவில் தொண்டு செய்ய விரும்பினர். உலகமகா யுத்தத்தை நீக்குவதற்குத் தாமும் போர்ப்படையிற் சேர்ந்து பயிற்சிபெற்று வந்தார். ஆனல் சில காலஞ்செல்லச் சமாதானம் உண்டானதால் இவர் யுத்தகளஞ் செல்லவேண்டிய தேவை உண்டாகவில்லை. எனவே வேறெவ்வகையில் நிலையான சேவை செய்யலாம் எனச் சிந்தித்தபோது துறவு பூண்டு பணிபுரிவதே மேலானது எனக்கருதினர்.

துறவு பூண்பதற்குச் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உடனடியாக வாய்க்கவில்லை. ஆனல் 1922-ஆம் ஆண்டில் இவரின் பேரபிமானத்துக்குரியவரான சைவப் பெரியார் திருவிளங்கம் அவர்கள் காலஞ்சென்றதையிட்டு இவர் மிகவும் கவலைப்பட்டார். தனக்கினிய அன்பரைப் பிரிந்து தவித்த இவருக்குப் பழைய நினைவு வந்தது. முன்னர் கருதிய துறவு மனப்பான்மை இவரை வெகுவாக ஊக்கவே இவர் கல்லூரி அதிபர் பதவியைப் பரித்தியாகஞ் செய்து விடத் துணிந்தார். இவ்வித துணிவுக்கு உடனடியாக அமைந்த காரணமும் ஒன்றுண்டு.

அக்காலத்தில் தமிழ்நாட்டில் மயிலாப்பூரிலிருந்த இராமகிருஷ்ண மடத்துத் தலைவரான சுவாமி சர்வானந்தா என்பவர் யாழ்ப்பாணத்துக்கு வருகைபுரிந்து இந்து சமயம் சம்பந்தமான விரிவுரைகள் ஆற்றிவந்தார். அவரின் திறமிகு தோற்றப் பொலிவும் உரைவளமும் கண்டார் கேட்டார் பலரை வெகுவாக ஈர்த்தன. அங்ஙனம் ஈர்க்கப்பட்டவர்களுள் மற்றொருவரான T. முத்துக்குமாரு ஆசிரியர் இந் நிகழ்ச்சிகளைப்பற்றி அடிக்கடி கூறிப் பெருமைப்படுவதுண்டு

இந்நிலையில் மனந்துணிந்த மயில்வாகனனர் தமிழ் நாட்டுக்குச் சென்று இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்து துறவுபூண்டு தவவொழுக்கம் பழகுவாராயினர்.

### பிரபோத சைதன்யர்

மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தார் மயில்வாகனனுருக்கு வழங்கிய துறவுத் திருநாமம் பிரபோத சைதன்யர் என்பதாம். அவர் மடத்தைச் சார்ந்து அவர்கள் பணிகளைச் செய்துவந்த காலத்தில் அவர்களின் வெளியீடுகளான இராமகிருஷ்ண விஜயம் என்னும் தமிழ் வெளியீட்டுக்கும், வேதாந்தகேசரி என்னும் ஆங்கில வெளியீட்டுக்கும் கௌரவ ஆசிரியராயிருந்தார். இவ்விரு சஞ்சிகைகளிலும் மாதந்தோறும் வனப்புமிக்க கட்டுரைகள் தீட்டிவந்ததோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுவந்த செந்தமிழ் என்னும் மாதசஞ்சிகையிலும் விஞ்ஞானம், கிரேக்க நாகரிகம், தமிழ் நாடகம் முதலியன சம்பந்தமாகக் கட்டுரைகள் எழுதிவந்தார்.

தமிழ்நாட்டில் தவ வாழ்க்கை மேற்கொண்டொழுகிய பிரபோதசைதன்யர் தம் வீட்டைத் துறந்தும் நாட்டைத் துறந்தும் தமிழைத் துறக்கமுடியாதவராய், தமிழர் கல்விச் சங்கம் என்னும் பேரவையொன்றை நிறுவிப் பணி

★ வீண்காலம் போக்குவதால் வாழ்வு பாழாகிறது ★

செய்து வந்தபோது தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்கள் அவருடன் நெருங்கிப் பழகித் தமிழ் வளர்க்க உதவிபுரிந்து வந்தார்கள்.

### விபுலாநந்த அடிகள்

பிரபோத சைதன்யரின் பெரும் பணிகளையும் தவவொழுக்கத்தையும் அவதானித்துவந்த இராமகிருஷ்ண மடத்தார், இவரின் பக்குவமுதிர்ச்சியை அறிந்து, இவரை அடிகளாராக்கத் தீர்மானித்தனர். சுவாமி சிவானந்தர் என்னும் பெரியார் 1924-ஆம் ஆண்டு சித்திரை மாதப் பூரணை நன்னாளில் இவருக்குத் தீட்சைபுரிந்து உபதேசஞ் செய்து, சுவாமி விபுலாநந்த என்னும் துறவுத் திருநாமத்தை வழங்கினார்கள். விபுலாநந்த அடிகளார் தமது குருவிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவராய் அவரைப் பல பாடல்களில் போற்றி வணங்கிவந்தார். இவர் செய்த குருசரண தோத்திரம் என்னும் தொகுதி உள்ளத்தைத் தொடுவதோடு குருவிசுவாசச் சிறப்பையும் காட்டுவது.

### குருசரண தோத்திரம்

ஈசனருள் மெய்ஞ் ஞானவொளிவிளக்கந் திருத்தி
இழிந்துழன்ற வாருயிரை யிருக்கையினி லிருத்தி
ஆசையெனுங் கனலவித்திவ் வேழையையன் றுண்ட
அணிமலர்ச்செஞ் சேவடியை யனைத்திணையும் விளக்கும்
தேசுசெறி பரிதியென்கோ சஞ்சீவி யென்கோ
திருவருளின் மழைபொழியுஞ் செய்யமுகி லென்கோ
பாசமொன்று நீர்மைதரப் பரிந்துவந்தென் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே.

### மதங்கசூளாமணி

சுவாமி விபுலாநந்த அடிகள் வாழ்வில் 1924-ஆம் ஆண்டில் முக்கிய நிகழ்ச்சிகள் பல நடைபெற்றுள்ளன. அவர் திருப்பாதிரிப் புலியூர் சண்முக மெஞ்ஞான சுவாமிகளின் மடத்து ஆண்டுவிழாவில் சைவசமயம் பற்றியும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் நாடகத் தமிழ்பற்றியும் பேசியுள்ளார். நாடகத் தமிழ்பற்றி அவர் பேசியவை மதங்கசூளாமணி என்னும் நூல்வடிவாக வெளிவந்தது. வடமொழியில் தனஞ்சயனாரும், ஆங்கிலத்தில் சேக்ஸ்பியரும் செவ்விதினுரைத்த நுண் பொருள்களை நிரைபட வகுத்து முறைபடக்கூறியவை. 132 பக்கங்களைக் கொண்ட நூல் வடிவுபெற்று வெளிவந்தது. அதன் முன்னுரையில் தம்பெயரை விபுலாநந்தர் என்று அடக்கமாக எழுதியுள்ளார்.

## மதங்கசூளாமணி

என்னும் ஒரு

## நாடகத் தமிழ்நூல்

இது

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதரும்
லண்டன் மாநகர்ப் பல்கலைக் கழகத்துப்
பௌதிக சாஸ்திர விற்பன்னருமாகிய
**விபுலாநந்த சுவாமிகள்**
இயற்றியது.

### [மதுரைத் தமிழ்ச் சங்கம்]
### செந்தமிழ்ப் பிரசுரம் - (ருக)

மதுரை
தமிழ்ச்சங்க முத்திராசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.
1926

### இலங்கைக்கு மீளல்

பண்டிதர் மயில்வாகனனாராகச் சென்றவர் சுவாமி விபுலாநந்த அடிகளாராக 1925ஆம் ஆண்டில் இலங்கைக்கு மீண்டார். அவருக்கு நாடெங்கும் வரவேற்புபசாரங்கள் நடைபெற்றன. கொழும்பில் நடைபெற்ற விழாவில் ''யாக்கை நிலையாமை'' என்னும் பொருள்பற்றி அவர் பேசினார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணவர் மகாநாட்டில் தலைமை தாங்கிப் பேசினார். யாழ்ப்பாணத்தில் சிலகாலம் வாழ்ந்து பலரோடு நெருங்கிப் பழகிய அவர் ஆறுமுகநாவலர் அவர்களை வெகுவாக மதித்தவர். அவர் நாவலர் பேரில் பல பாடல்கள் செய்து துதித்துள்ளார். அவை நாவலர் புராணம் என நாம் கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளன. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் நாவலர் என்னும் பட்டம் வழங்கிய பெருமையைக் கூறும் பாடல் ஒன்றைப் பதம் பார்த்தாற் போதுமானது.

பாவலர் போற்றும் ஞானதே சிகரைப்
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர்கூட் டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
"நாவலர்" எனும்பேர் தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகும்தகும் என்ன.

### கல்வித் தொண்டு
#### பாடசாலைகளின் முகாமை

இலங்கையில் கிழக்குப் பகுதியிலும் வடக்குப் பகுதியிலும் இராமகிருஷ்ண மடத்தாருக்குப் பதினேழு பாட



சுவாமி ஜீவனானந்தர்

★ வீரமுள்ளவன் எதையும் குறை கூறுவதில்லை ★

சாலைகள் இருந்தன. சுவாமிகள் இலங்கைக்கு மீண்டபின் அவரே இப்பாடசாலைகளின் பொது முகாமையாளரானார். தமது முயற்சியால் புதிதாகச் சில பாடசாலைகளை உருவாக்கினார். காரைதீவு சாரதா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் என்பன சுவாமிகளின் இரு கண்கள் எனப் பிரகாசிக்கின்றன. சுவாமிகள் யாழ்ப்பாணத்து வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் அங்கமாக மாணவர் இல்லம் ஒன்றை ஆரம்பித்தார். சில காலஞ் செல்ல அது கல்லடி உப்போடைக்கு மாற்றப்பட்டு இன்று சுவாமி ஜீவனானந்த சுலாமிகளால் நடத்தப்பெற்று வருகிறது.

### பாடசாலை அதிபர்

சுவாமி விபுலாநந்தர் சிவானந்த வித்தியாலயத்தில் நல்லவர்களை உருவாக்குவதற்கு வசதியாகப் பலர் வேண்டுகோளை மறுக்கமுடியாமல் தாமே அதிபர் பதவியையும் வகித்துப் பாடசாலையை முன்னேற்றமடையச் செய்து வந்தார். அயலில் தமக்கு ஒரு வாழ்விடம் அமைத்துச் சிவபுரி என அதற்குப் பெயரிட்டு அமைதியாக வாழ்ந்து பணிபுரிந்து வந்தார். இக்காலத்திலேதான் அவர் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றிவந்தார்.

மட்டக்களப்புக்குச் சிறப்பளிக்கும் கசுக்கொட்டையும், தேனும் வரண்டாலும் வற்றாத வாவியில் பாடும் மீனிசை மாறாது. மீனிசை பற்றிப் பல பாடல்கள் பாடிய அடிகளார் தமிழரின் பழைய யாழிசையை நினைவிற் கொண்டார்.

### திருக்கோணமலை இந்துக்கல்லூரி

தேவாரம் பாடப்பெற்றதும், தென்கைலை எனப் பெயர் பெற்றதும், தமிழ்ப்பிரதேசமாயுள்ளதும் இன்னும் பல சிறப்புக்களும் பொருந்திய திருக்கோணமலை மாவட்டத்திலே ஒரு சைவாங்கிலக்கல்லூரி இல்லாத குறையை நீக்கக் கருதிய சுவாமி விபுலானந்தர் அன்பர் பலரிடம் அதன் அவசியத்தைப்பற்றிக் கூறினார். அப் பெரும் பணிக்குப் பலரும் உபகரிக்கவே சுவாமிகள் 1927ஆம் ஆண்டில் அதற்கான அடிக்கல் நாட்டினார்.

இரண்டாண்டுகளில் கட்டட வேலைகள் முடிந்ததும் சுவாமிகள் திருக்கோணமலைக்கு இடம்பெயர்ந்து இந்துக் கல்லூரியின் அதிபராயிருந்து அதனை வளர்த்தார்கள்.

### தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ் நாட்டில் 1931ஆம் ஆண்டில் சிதம்பரத் தலத்துக்கு அருகில் புதிதாய் அமைந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய்த் தலைமைதாங்குவதற்குரிய தகுதி சுவாமிகளிடம் இருப்பக்கண்ட இராசா சேர் அண்ணாமலைச் செட்டியார் இவரை அப்பதவியை ஏற்குமாறு வேண்டினார். இவரும் இராமகிருஷ்ணமடத்தாரிடம் அனுமதிபெற்று ஆங்குச் சென்று பேராசிரியராய் அமர்ந்தார்.

சுவாமி விபுலானந்தர் தமிழ்த் துறைக்குத் தலைமை தாங்கிய முதற் பேராசிரியராவர். இவருக்குமுன் எவருக்கும் இப்பெரும் பதவி கிடைக்கவில்லை. அன்றி இவர் காலத்தில் இவருக்குக்கீழ் தமிழ் நாட்டுப் பெரும் படிப்பாளிகள் உதவியாளர்களாயிருந்து சிறப்புப் பெற்றார்கள். அவர்களுள் கந்தசாமிப்பிள்ளை என்பவரும் ஒருவர். அவர் பெருந்தன்மை வாய்ந்த கடமை வீரர். அன்புள்ளம் கொண்ட நல்லவர். அறிவுத்திறமை வாய்ந்தவர். பேராசிரியரைப் பெரிதும் மதித்தவர்.

### முழுநேரத்தொண்டு

பொறுப்புவாய்ந்த பேராசிரியர் வேலை பார்த்துவந்த போதும் சுவாமிகள் தமது தமிழ்ப்பணி, சமயப்பணி, சமூகப்பணி முதலிய பல்வேறு தொண்டுகளிலும் ஈடுபட்டு வந்தார். இலங்கையில் உள்ள இராமகிருஷ்ணமடத்தின் பாடசாலை முகாமை வேலையும் அவருக்குப் பளுவாயிருந்தது. எனவே பேராசிரியர் பதவியைத் துறந்தால் தமது பன்முகப் பணிகளைச் செவ்வனே செய்யலாமெனக் கருதி அதனை 1933ஆம் ஆண்டில் விட்டுவிலகினார். முழுநேரப் பணி செய்ய முற்பட்ட வேளையில் வடக்கே இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதி என்னுமிடத்திலிருந்து வெளிவந்த பிரபுத்தபாரத என்னும் ஆங்கிலச் சஞ்சிகைக்குப் பத்திராதிபராய் நியமனம்பெற்று அதனை நடத்துவதற்கு இமயஞ்சார்ந்தார்.

ஆங்கிலப் பத்திரிகையில் அவர் செய்த அரும்பணிகளுள் ஒன்று தமிழின் பெருமை, தமிழர் நாகரிகம், தமிழ்ப்பண்பாடு, தமிழ்நாடு என்பனபற்றி அவர் உலகத்துக்கு எடுத்து விளக்கியதாகும். பத்திரிகையை நடத்திவந்த காலத்தில் இசைத்துறையை நிறைவுசெய்ய வேண்டிய நிலைமை உண்டாகவே வடக்கிலிருந்து தெற்கு நோக்கினார்.

தென்நாட்டிலிருந்து தமது பன்முகப் பணிகளைச் செய்துவந்த காலத்தில் 1934-இல் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில் தலைமைதாங்கி விழாவை நடத்தியும், 1935ஆம் ஆண்டில் திருவண்ணாமலையில் நிகழ்ந்த சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழாவில் தலைமை தாங்கியும் அறிஞர் பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

### இசைத்தமிழ்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தோடு நெருங்கிய தொடர்புகொண்ட அடிகளாரின் இசைத்தமிழாய்வுகளைச் சங்கத்தார் தமது தமிழ்ப்பொழில் என்னும் திங்கள் ஏட்டில் வெளியிட்டுவந்ததோடு அக்கட்டுரைகள் நூலுருவம் பெறும்போது தாமே அதனை வெளியிட்டுவைப்பதாகவும் பொறுப்பேற்றார்கள். அடிகளார் தாம் மேற்கொண்ட முய்ற்சி பெரு வெற்றியீட்டப் போவதையுன்னித் தமது இசையர்ராய்ச்சியின் முழுப்பயனான யாழ் நூலைத் தீவிரமாக எழுதிவருவாராயினர்.

### ஆக்கபூர்வமான வேறு பணிகள்

அடிகளார் ஆற அமர ஓரிடத்தமர்ந்து பணி செய்வதற்கு அறிஞர்கள் ஆர்வமுள்ளவர்கள் விட்டுவைப்பதில்லை. இங்கு வாருங்கள் அங்குப் போமின்கள் என்று எங்கெங்கும் வருமாறு வரவழைப்பார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தார் 1936ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் இவரை அழைத்து இசைத்தமிழ்பற்றி ஆறு நாள் பேருரை நிகழ்த்தச் செய்தார்கள்.

### கலைச்சொற்கள்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்து இறவாத புகழ்பெறுதல் வேண்டும் என்று பாரதியார் எப்பவோ பாடினார். அவர் வழியில் செயலாற்ற

★ பிறர்க்கென வாழ்வதே பெரிய வேள்வியாகும் ★

முனைந்த ஒரு சிலருள் அடிகளாரும் ஒருவர். தமிழ் நாட்டுத் திருநெல்வேலியை அமைவிடமாகக்கொண்ட சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 1934ஆம் ஆண்டுமுதல் 1938ஆம் ஆண்டுவரை அரிதின் முயன்று கலையாக்கத்துக்கான கலைச்சொற்களைவகுப்பதற்கு வழிவகுத்தனர். அதற்குரிய மாநாட்டை சேர். சி. பி. இராமசாமி ஐயர் திறந்துவைத்தார்.

அக்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தார், திருவாங்கூர் பல்கலைக்கழகத்தார், சென்னை அரசியல் முதன் மந்திரி இராசகோபாலாச்சாரியாரவர்கள் இம் முயற்சிக்குப் பொருளுதவிபுரிய முன்வந்தனர். ஆங்கில அரசாங்கமறிய நடைபெற்ற இப்பணிக்குழுவின் பொதுத் தலைவராக இருந்தவர் சுவாமி விபுலானந்தராவர். அன்றி இவர் வேதிநூல் என்னும் கெமிஸ்றி பாடத்துக்கான தமிழ்ச்சொற்களைத் தொகுத்துதவினர். வேறுதுறைகளைச் செய்தவர்கள் கே. எஸ். இராமசாமி ஐயரவர்கள், இராச கோபாலாச்சாரியர் அவர்கள், எம். எஸ். சபேசஐயரவர்கள், எம். ஜி. மணவாளராமானுசம் அவர்கள், என். சுப்பிரமணியஐயரவர்கள், ரி. எஸ். நடராசபிள்ளை அவர்கள், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களாவர்.

## கங்கையில் விடுத்த ஓலை

விபுலானந்த அடிகளார் அண்ணாமலையிற் பேராசிரியராய் இருந்த காலத்தில் விரிவுரையாளராயிருந்தவர்களுள் பெருங்குணம்படைத்த கந்தசாமி என்பாரும் ஒருவர். அவர் இளம் வயதிலே மாரடைப்பு நோயால் இறந்த போது அடிகளார் வடக்கிலிருந்தார். இச் செய்தியைக் கேட்டு வருந்திய அடிகளார் கையறு நிலையிற் கலங்கிக் கவிதை புனைந்து கங்கையை அமரரிடம் தூதுவிடுப்பதாகப் பாடினர். அவர் பாடிய முப்பதுக்கு மேற்பட்ட முடிதமிழ்ப் பாடல்களுள் ஒன்றிரண்டைப் படித்துச் சுவையறியலாம்.

கந்தசா மிப்பெயரோன் வேட்களத்தி லென்னைக்
கண்டநாள் அன்பென்னுங் கயிறுகொண்டு பிணித்தான்
அந்தநாள் முதலாக நட்புரிமை பூண்டோம்
அண்மையில்யான் வடநாடு நண்ணியதை அறிந்தே;

நம்மடிகள் உறைகின்ற தவப்பள்ளி யாது
நற்றவத்தோர் முகவரியா தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபொதி ஓலையொன்று விடுக்கச்
சிந்தை வைத்தான் எனவெனக்கோர் அன்பனறி வித்
[தான்.

ஓரிருநாள் கழியுமுன்னர் மார்படைப்பு நோயால்
ஊனுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பனெனும் அவலவுரை செவியில்
அனற்பிழம்பாய் புகுந்துளத்தை உருக்கிய தப்பொழுதில்.

## தென்னாடு வருதல்

வடக்கில் சிலகாலமுறைந்து கைலாய தரிசனம் முதலிய பேறுகள் பெற்றபின் மீண்டும் தென்னாடு புகுந்து ஆங்கும் ஈழநாட்டிலும் தமக்குரிய பெரும் பணிகளைச் செய்துவந்தார். ஊர்கள் தோறும் நடைபெற்றுவந்த விழாக்களில் விரிவுரைகளாற்றிவந்ததோடு, நாட்டில் நிலவிய பத்திரிகைகளில் பலதரப்பட்ட கட்டுரைகள் எழுதியும் வந்தார்.

## முத்தமிழ்மாநாடு

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் சிறப்பினை உணர்த்தும் பெருவிழாவொன்று மதுரைப் புது மண்டபத்தில் 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதலாம் இரண்டாம் மூன்றும் நாள்களில் வெகு விமரிசையாக நடைபெற்றது. புலிக்கொடி, மீன்கொடி, விற்கொடி என்னும் மூவேந்தர் கொடிகள் வானளாவப் பறந்தன. வெள்ளம்போல் மக்கள் விழா மண்டபத்திலும் வெளியிலும் கூடியிருந்தனர். விழாவைக் கண்டும் கேட்டும் மக்கள் மகிழ்ச்சியும் உணர்ச்சியும் அடைந்தனர். சேர். பி. ரீ. இராஜன் அவர்கள் பொது வரவேற்புரை நிகழ்த்த இராமநாதபுர மன்னர் இயல் தமிழ் விழாவைத் திறந்து வைக்க, இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனர் வரவேற்புரை நிகழ்த்த, விபுலாநந்த அடிகள் தலைமைப் பேருரை நிகழ்த்தினர்.

அடிகளார் தொடுக்கும் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே! எனத் தொடங்கும் பாடலைப் பாடியபின், அவையோரை நோக்கி, மாட்சிமை தங்கிய சேதுபதி மன்னர் அவர்களே! முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமப் புலவர்களே! தமிழணங்கின் செல்வப் புதல்வர்களே! புதல்வியர்களே! என்று பேசத்தொடங்கியதும் மண்டபத்தில் கரகோஷம் வானைப்பிழந்தது, வகைக் கரையில் எதிரொலித்தது. எல்லோரும் விம்மிதமுற்றுச் சித்திரப் பாவைபோல சைவற்றிருந்து தேன்மழையைச் செவியால் மாந்தி இன்புற்றனர்.

''தொன்மை நலஞ்சான்ற இந் நந்நகரிலே கன்மாப் பலகை யேறியிருந்து தமிழாராய்ந்த செந்நாப்புலவர் தம் செழும்பனுவலிலே கற்போர் காணும் செம்மையும் அழகும் உண்மையும் நம் நெஞ்சம் புகுந்து பொய்தீர்த்து இருள் கடிந்து நம்மை நன்னெறிப்படுத்துவதாகுக!'' என்று அவர் தொடர்ந்து பேசினர். வந்திருந்தோர் அனைவரும் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையில் ஆனந்தப் பெருவாரிதியில் ஆழ்ந்திருந்தார்கள்.

## இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்

தமிழ்நாட்டிற் சிறப்புடன் சேவை செய்துவந்த அடிகளாரை நம் நாட்டவர், பிறந்தநாட்டை நினைத்துப் பார்த்துப் புறப்பட்டு வாருங்கள் என்று நெருக்கினர்கள். இலங்கையில் 1943ஆம் ஆண்டில் தனிப் பல்கலைக்கழகம் உருவானபோது, அதன் தமிழ்த்துறைத் தலைவராய் இருப்பதற்குத் தகுதிவாய்ந்தவர் அடிகளார் எனக்கண்டார்கள். சுவாமிகள் அதனை அலங்கரித்தல் வேண்டும் என்றும் அதற்கு இராமகிருஷ்ண மடத்தார் அவரை அநுமதித்தல் வேண்டும் என்றும் மடத்துப் பெருந்தலைவரையும் கேட்டார்கள். அடிகளார் தமது யாழ் நூலுக்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்த காலம் அது. அவர் அவற்றை வேண்டுமளவில் திரட்டிக்கொண்டு ஈழம் மீண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்து முதல் தமிழ்ப் பேராசிரியராய் 1943ஆம் ஆண்டின் இறுதிக்காலத்தில் பதவியேற்றார். அவரின் பெருமைகளை அவர்தம் பழைய மாணவர் பலர் இன்றுந்தான் சொல்லிச் சொல்லி வாயுறுகின்றார்கள். உபவேந்தராயிருந்த ஐவர் ஜெனிங்ஸ் அவர்கள் அடிகளாரை வெகுவாக மதித்தார்கள்.

## யாழ் நூல் அரங்கேற்றம்

யாழ் என்னும் நரம்புக் கருவியால் தமிழ் மொழியே யன்றி ஈழவள நாட்டின் வடநாடும் பெருஞ் சிறப்புற்றது. பழந்தமிழ் பாரம்பரியத்தில் முத்தமிழ் என நிலவிய எங்கள் மொழி, முறையே இயல் இசை நாடகம் எனப் பெயர் பெற்றுப் புலவர், பாணர், கூத்தர் என்போரால் சிறப் புற்றது. அதனை மூவேந்தரும் போற்றி வளர்த்தனர். முச் சங்கங்களிலமர்ந்த புலவர் பெருமக்கள் முத்தமிழுக்கு வெகுவாக உபகரித்தனர்.

இடைக்காலத்தே தமிழ் வளர்த்த ஒருசாரார் இசை யும் நாடகமுங் காமம் பயப்பனவென அவற்றை ஒதுக் கியதால், பண்டைய இசைமரபு பயிலப்படாது ஆதர வற்று அருகிக்கிடந்தது. திருஞானசம்பந்தப் பெருமான் காலத்து வாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணனுர் கைக் கொண்ட யாழ், பிற்காலத்தவருக்கு எத்தகையதென்பது தெரியாது போயிற்று. அரண்மனைகளில் ஒலித்த மகர யாழ் மறைந்தொழிந்தது. ஆயிரம் நரம்புகள் அடர்ந்த யாழை அறிவதே அரிதாயிருந்தது. திருக்கோயில்களில் இன்னிசை வீணைகள் யாழினங்கள் பக்கம் பக்கமாக ஒலித்த காலம் மாறிற்று. குழலொலி யாழொலி கூத்தொலி இல் லாமற் போயின.

விபுலாநந்த அடிகள் பதினன்கு ஆண்டுகள் அரிதின் முயன்று பலவகை யாழினங்களையும் வீணைகளையும் கண் டார். சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டி வீணை முதலியனவற்றையும், முளரி யாழ்போன்ற யாழினங்களை யும் கண்டு, அவற்றை இசைக்க வல்லாரிடம் கொடுத்து மீட்டு ஒலிக்கச் செய்தார். புகழ்பூத்த பொன்னையபிள்ளை யாரின் மைந்தன் சங்கீதபூஷணம் சிவானந்தம்பிள்ளை அடிகளாரின் அற்புத இசைக்கருவிகளை அருமையாகத் தடவியொலித்தார்.

முன்னமே வாக்குக்கொடுத்து ஊக்கமளித்து வந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் தங்கள் ஆதரவில் யாழ் நூலை அரங்கேற்றுவதற்கான ஒழுங்குகள் அத்தனையையும் அருமையாகச் செய்தனர். திருக்கொள்ளம் புத்தூர்த் திருக் கோயிலில் திருஞானசம்பந்தமூர்த்திகள் எழுந்தருளிய முன் றலில் 1947ஆம் ஆண்டு யூன் மாதம் இருபதாம் இருபத் தொராம் நாள்களில் பெருவிழா நடைபெற்றது. தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஈழநாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய பிரதேசங்களிலிருந்தும் விற்பத்தி மான்கள் அன்பர்கள் ஆங்குச்சென்று கூடினர்.

சேற்றூர் ஜமீந்தாரும் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புரவலரு மான சிதம்பரஞ் செட்டியார் எல்லோரையும் இன்சொற் கூறி வரவேற்றுர். அறிஞர் பலர் பாராட்டிப் பேசியபின், அடிகளார் தம் முயற்சியைப்பற்றிக் கூறியபோது தாம் சிற். கைலாயபிள்ளை என்னும் அறிஞர் கோமானிடம் சிலப்பதிகாரம் பயின்றபோது தமக்கு யாழில் மனஞ்சென்ற விருத்தாந்தத்தைக் கூறி விளக்கினுர்.

அவர் பிறந்தநாட்டின் பாடும் மீன்கள் அவரை வெகு வாகக் கவர்ந்தன. அவர் பத்தாண்டுகளுக்கு மேலாக இசையிலக்கணம், இசைப் பாட்டிலக்கணம், இசைக்கலை வளர்ச்சி என்பனவற்றை முறையாக ஆராய்ந்தார். மது ரைத் தமிழ்ச்சங்கம், சென்னைப் பல்கலைக்கழகம், யாழ்ப் பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலிய பேரவைகளில் தமதாராய்ச்சி பற்றி விரித்துரைத்தார். அவற்றைக் கேட்டார் பலரும் அவற்றை நூலாக வெளிக் கொணருமாறு வேண்டினுர்கள்.

அந்த ஆக்கத்தால் உந்தப்பெற்றவர் மேலும் பண்ணும் திறனும், குழலும் யாழும், எண்ணும் இசையும், பாலைத் திரிபு, சுருதி வீணை முதலியன தொடர்பாகக் கரந்தைத் தமிழ் சங்கத்துத் தமிழ்ப் பொழிலில் மாதந்தோறும் எழுதி வந்தார். இன்னும் மதுரைத் தமிழ்ச் சங்கத்து வெளியீடான செந்தமிழ் சஞ்சிகையிலும் சங்கீத மகரந்தம், இசைக்கிர மம், எண்ணலளவை என்பனவாதியனபற்றி எழுதிவந்தார். இங்ஙனம் எழுதியவை போதாவென்று சென்னை, திருச்சி வானெலி நிலையங்களிலும் தொடர்பாகப் பேசிவந்தார்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவராயிருந்த காலத்தில் அங்கே இசைப்பகுதியில் தமக்கு வேண்டியவற்றைப் பொன்னையாபிள்ளை என்பாரிடம் கேட் டறிந்திருந்தார். இங்ஙனமாக அடிகளாருக்கு யாழ் நூலுக் கான பூர்வாங்க ஆயத்தங்கள் யாவும் பூரணமாக அமைந் திருந்தன. அவர் மிகவருமையான யாழ் நூலை உருவாக்கி உபகரித்தார். அவரின் உபகரிப்பு இருபதாம் நூற்ருண்டில் இணையில்லாத படைப்பாகும்.

யாழ் நூல் வெளியானபோது நூலையும் யாழையும் அடிகளாரையும் வாழ்த்திய புலவர்கள் பலராவர். ஈழத்து முதுபெரும் புலவராய நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் பாடல் சுவையுள்ளதாகும்.

எங்கணும் இசைக்கதிர் விரித்திருள்
அகற்றிடும் ஞானசூ ரியனுகினுய்
எரியிலோ புனலிலோ சிதலிலோ மண்ணிலோ,
இல்லாது போன விசை நூல்
அங்கணுல கத்திலே நிலைநிற்க வருள்செய்த
அடிகளுநனை நினைய வருளாய்
ஐம்புலத் தொல்லைதபு செம்புலச் செல்வவிபு
லாநந்த ஞான குருவே.

முன்னர் உலகியல் விளக்கம் என்னும் நூலைப் புகழ்ந்து வெளியிட்ட விபுலாநந்தரின் உதவியை மறவாத அந் நூலாசிரியர் நவநீதகிருஷ்ண பாரதியார், இப்போது அடி களார் செய்த பெரும்பணியை வியந்து பல பாடல்களால் வாழ்த்தினுர்.

வாணனை மானுடலைப் பெரும் பொருளை
வருமுயிரை மகிழ்ந்தர்ப் பித்துக்
கோணமல் தமிழ்மகளை நலிவகற்றிக்
கொலுவிருத்திக் குளிர்ந்து காண்போன்
பூணுத நோன்பில்லோன் பொறுக்காத
பொறையில்லோன் புலத்திற் கப்பாற்
காணுத காட்சியில்லோன் எனும் விபுலா
நந்தவேள் கவின்று வாழி.

சீராம கிருட்டினனுர் ஞானநடை
மணியாகுஞ் சிறப்புக் கொண்டோன்
பாராதி புவனமெலாம் பரம்பொருளாய்ப்
பார்த்துவக்கும் பண்பு கண்டோன்

★ நாம் தேடித்திரியும் நலமெல்லாம் நம்மிடத்திலுண்டு ★

பேராரும் பாவலவன் நாவலவன்
முத்தமிழ்க்கோர் பெருமை தந்தோன்
நேராரும் இலாவிபுலா நந்தனெனும்
ஒண்தவத்து நிமலன் வாழி.

### மீட்சியும் மறைவும்

யாழ் நூல் அரங்கேற்றம் பெருவிழாவாக இருதினங்கள் நடைபெற்றபின் அடிகளார் இலங்கைக்கு மீண்டார். அவர் உடல்நலம் வெகுவாகக் குன்றியிருந்தது. முன்னர் ஒருமுறை அவரை வாட்டித் தணிந்திருந்த சுரநோய் மீண்டும் துன்புறுத்தியது. அடிகளாரின் அன்பர்கள் போதிய மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தபோதிலும் அவரின் விதி விளையாடிவிட்டது. அவர் 1947-ஆம் ஆண்டு யூலை மாதம் பத்தொன்பதாம் நாள் ஆயிலிய வேளையில் பூதவுடலை நீத்து அமரரானார்.

### புகழும் எச்சமும்

அடிகளாரின் புகழைப் பேசிநிற்பன அவரின் படைப்புக்களாகும். அவை பலதிறப்பட்டவை. அவர் எழுதிய பன்னூற்றுக்கணக்கான கட்டுரைகள் இன்னமுந்தான் முற்றாகத் திரட்டப்பெறவில்லை. இதுவரை வெளிவந்த விபுலாநந்த அமுதம், விபுலாநந்தத்தேன் விபுலாநந்த வெள்ளம், விபுலாநந்தச் செல்வம், விபுலாநந்த ஆய்வு, விபுலாநந்த உள்ளம் என்பனவும் பிறவும் அவற்றைத் திரட்டித் தொகுத்த அன்பர்களின் கைக்கெட்டியனவேயாகும். எட்டாதவை இன்னும் பலவுள.

அடிகளாரின் கவிதைகள் வெள்ளம்போற் பரந்தவை. அவற்றுள் அகப்பட்டவை ஒரு சில விபுலாநந்தக் கவிமலர் என்னுந் தொகுதியாக வெளிவந்துள்ளன.

### சமாதியும் இரங்கலும்

அடிகளாரின் பூதவுடல் கொழும்பில் இராமகிருஷ்ண சங்க மண்டபத்தில் வைக்கப்பட்டபின் மட்டக்களப்புக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கே அவர் விரும்பிய விவேகாநந்த வித்தியாலயத்தின் அண்மையிலுள்ள ஆலமரத்தின் அருகில் அடக்கஞ்செய்யப்பட்டது. அங்கே அவர் இயற்றிய பாடல்களில் அவர் விரும்பிய ''ஈசனுவக்கும் மலர்'' என்னும் தொகுதியில் உள்ள ஒரு பாடல் எழுதப்பட்டுள்ளது.

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனூர் வேண்டுவது.

அடிகளாரின் மறைவைக் குறித்து மனம் நொந்து பாடினோர் பலர். அப்பாடல்களின் தொகுதியே தனி நூலாக அமையுந்தரத்தவை. முன்னர் ''உலகியல் விளக்கம்'' என்னும் நூலை வெளியிட்டுத் தம்மைப் பாராட்டிய பெருந்தன்மையை நவநீதகிருஷ்ணபாரதியார் மறக்கவில்லை. மனக்கவலைகொண்டு அவர் விபுலாநந்த அடிகளாரை நினைந்துருகிப் பாடினார்.

யாழ்உற்றோம் செந்தமிழ்க்காம் பாணர் இசையுற்றோம்
வீழ் உற்ற ஆல்போல் வீறுஉற்றே — வாழ்வற்றோம்
என்று விபுலாநந்தா! இங்கிருந்தோம் நீபிரிந்தே
சென்று விட்டாய் எங்களிப்பைக் கொண்டு.

பூணுந் துறவழகும் போற்றுதமிழ்த் தொண்டழகும்
பேணும் மழலையருட் பேச்சழகும் — காணுநெறி
ஏதுவிபுலாநந்த என்றரற்ற வாளாநீ
போதுதலோ நிற்காகும் பொற்பு.

தங்கத்தாத்தா என வழங்கிய நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்கள் அடிகளாரை நினைந்துருகிப் பாடியவை எம்மையும் உருகவைக்குந்தரத்தவை.

என்றுமுள செந்தமிழ்த்தா யீன்றெடுத்த
தவப்புதல்வா! எவரும் போற்றும்
குன்றனைய நற்றவத்துக் கோமானே!
தமிழ்படர்கற் பகப்பூங் கொம்பே!
வென்றபுல னுடைவீரா! விபுலானந்
தப்பெயர்கொள் மேலோய்! விண்ணிற்
சென்றனையே யாம்வருந்த யார்செய்த
தவக்குறைவோ தெரிகி லோமே.

தனியான செந்தமிழும் ஆங்கிலமும்
பல்கலையும் சமய நூலும்
முனியாது துறைபோகக் கற்றறிந்து
தத்துவநூல் முழுதுந் தேறித்
துனியாகும் பவத்தொடக்கைத் துடைத்துமுனி
யாசியொரு துணையாய் நின்றாய்
இனியாரே இனியாராய் மற்றெமக்குத்
துணையாவார் இயம்பு வாயே.

அடிகளாரின் பசுமையான நினைவு நிலவுவதாக என நினைந்து மனநிறைவோடு இதனை வெளியிடுவதில் நாம் பெருமைப்படுகிறோம். அடிகளாரின் நினைவு என்றும் நின்று நிலவுவதாகுக. ★

## மண்டைதீவில் மகத்தான மரம் நாட்டும் பணி

சப்ததீவுகளிலும் தலைத்தீவு போல நிலவும் மண்டைதீவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் உபநிலையம் அமைந்துள்ளமை தெரிந்ததே. அந்நிலையத்தின் சூழலை அழகுபடுத்துவதற்கு விரும்பிய மில்க்வைற் தொழிலதிபருக்கு நிலையப் பொறுப்பாளர் திரு. ஏ. பி. ஜயசூரியா அனுமதி கொடுத்து ஒத்துழைப்பு நல்கினார். எனவே சென்ற வாரம் நிலைய எல்லைகளில் நாற்புறமும் ஏராளமான பனம் விதைகளையும், நிழல் தரும் மரங்களையும், பயன் தரும் மரங்களையும் தொழிலதிபரும் நிலையப் பொறுப்பாளரும் ஏனைய உத்தியோகத்தரும் நாட்டினர்கள்.

## சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும்

இவர்களின் புதிய நிலையத்தைக் கோண்டாவில் கிழக்கில் உள்ள சுற்றாடலில் மில்க்வைற் தொழிலதிபர் 30 – 9 – 79 ஞாயிற்றுக்கிழமை மாலை மங்களகரமாகத் திறந்து வைத்தார்.

★ ஆயத்தப்படுத்துதல் வெற்றிக்கு வித்து ★

### கொஞ்சம் கவனியுங்கள்

## மில்க்வைற் செய்தியின் செய்தி

பாடசாலைகளுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் மில்க்வைற் செய்தி தொழிலகத்தின் வெறும் விளம்பர வெளியீடல்ல. எங்கேயோ ஒருமூலையில் உங்கள் ஆதரவைக்கேட்டு ஒருபந்தி இடம்பெற்றிருக்கலாம். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதமும் நாட்டுக்கு நல்லதைச் சொல்லும் வெளியீடு என்று எல்லோரும் புகழுகிறார்கள். அது நிற்க,

ஆயிரக்கணக்கான பாடசாலைகளுக்கும் நூற்றுக்கணக்கான சனசமூக நிலையங்களுக்கும், சில தனியார் நிறுவனங்களுக்கும் இதுகாறும் நான்காண்டுகளாக நாம் செய்தியை இலவசமாக அனுப்பிவைத்தோம். இப்போது சந்தாப்பணம் கேட்கவில்லை. இதனை உங்களுக்குத் தேவை என்று நீங்கள் கருதினால் தயவுசெய்து எமக்குத் தபாற்செலவில்லாத வழியில் நீங்கள் இதனை இலவசமாகப் பெறுவதற்கு ஏதாவது ஒருவழியை 1-1-1980 முதல் வகுத்துக்கொள்ளுங்கள். இது செய்யத் தவறுபவருக்குப் புதுவருடம் தொடக்கம் செய்தி அனுப்பப்படமாட்டாது.

மில்க்வைற் செய்தி,<br>
தபாற்பெட்டி 77, — நிர்வாகி<br>
யாழ்ப்பாணம்.

---



## Sadhana Tattawa
*or*
## The Science of Seven Cultures

— Swami Sivananda

The Seven cultures for quick evolution of the Human Soul.

1. HEALTH CULTURE
2. ENERGY CULTURE
3. ETHICAL CULTURE
4. WILL CULTURE
5. HEART CULTURE
6. PSYCHIC CULTURE
7. SPIRITUAL CULTURE

### 1. Health Culture

1. Eat moderately. Take light and simple food. Offer it to God before you eat. Have a balanced diet.
2. Avoid Chillies, Garlic, Onions, tamarind as far as possible. Give up tea, coffee, smoking, betels, meat and wine entirely.
3. Fast on Ekadasi days. Take milk, fruits or roots only.
4. Practise Yogic Asanas or physical exercises for fifteen to thirty minutes every day. Take a long walk or play some vigorous games daily.

*— To be Continued*

## நூற்றாண்டு நினைவு

பத்தொன்பதாம் நூற்றாண்டு தந்த யாழ்ப்பாணப் புலவர்களுள் வண்ணை. நெ. வை. செல்லையா என்பவரும் ஒருவர். யாழ்ப்பாணத்துப் பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த இவர் ஈழத்திலேயன்றி, தமிழ்நாடு, பர்மா, மலேசியா மற்றும் பலவிடங்களிலும் பெருமதிப்புப் பெற்றவர். சேர். இராமநாதன், கலாநிதி சு. நடேசபிள்ளை முதலானோரின் அபிமானத்துக்குரியவர். பல பிரபந்தங்கள் பாடித் தமிழ் வளர்த்தவர். இவர் 1879ஆம் ஆண்டிற் பிறந்தவர். இவரைப்பற்றி விரிவாக எழுதக்கூடிய வாய்ப்பு இருந்தும் செய்தியில் இடமின்மையால் இதுவரை வெளியிடவில்லை.

நவம்பர் மாதம் சேர். இராமநாதன் மறைந்த மாதம். எனவே செல்லையாப்புலவர் பாடிய பாடல் ஒன்றைப் பதம்பார்க்க இது ஒரு சந்தர்ப்பமாகிறது.

இலங்கையர்க்காய்ப் பன்முறையு மிங்கிலண்டு சென்றாளு<br>
மெழில்சேர் மன்றில்<br>
துலங்குபிர முகர்தன்னோ டின்றாட்டுக் குறைகூறித்<br>
துடைக்கச் செய்தாய்<br>
புளங்கொளம ரிக்காவிற் சைவமதப் பிரசாரம்<br>
பொழிந்து மேன்மை<br>
யிலங்க வைத்தாய் உன்னிழப்பை யென்னுரைப்பேன்<br>
தமிழ்ச் சாதிக் கிருக ணன்னாய்.

---

## இலங்கையில்
## முதன் முதலாகச் சிறப்புப்பெற்றவர்

1. கோப்பிப் பயிர்ச்செய்கையாளர்.
2. பரிஷ்டர் என்னும் சீமை அப்புக்காத்து
3. சிவில் சேவையில் சித்திபெற்றவர்.
4. கிரீக், லத்தீன், றைபோஸ் சிறப்புப் பெற்றவர்.
5. தேசிய மகாசபைத்தலைவர்.
6. ஆங்கிலத் தேசாதிபதி.
7. பிரதம மந்திரி.
8. பெண் பிரதம மந்திரி.
9. யாழ்ப்பாணத்தில் அச்சுக்கூடம்.
10. யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர்.
11. யாழ்ப்பாணத்தில் தோம்புப் பாதுகாவலர்.
12. யாழ்ப்பாணத்தில் பொதுசன நூலகத்தை ஆரம்பித்தவர்.
13. சைவசித்தாந்தத்தை ஆங்கிலத்தில் பெயர்த்தவர்.
14. புகைப்படக் கருவியை புழக்கஞ்செய்தவர்.
15. யாழ்ப்பாணத்தில் பாண் போறணை ஆரம்பித்தவர்.
16. சைவ ஆங்கில பாடசாலையை ஆரப்பித்தவர்.
17. கத்தோலிக்க பாதுகாவலன் பத்திராதிபர்.
18. கொழும்பில் சத்திரம் கட்டியவர்.
19. இந்துசாதனம் பத்திராதிபர்.
20. வைத்திய தாதிமாருக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி அளித்தவர்.
21. செந்தமிழ்ப் பரிபாலனசபைத் தலைவர்.
22. தென்னிந்திய சைவசித்தாந்த சமாஜத் தலைவர்.

(விடைகள் 16ஆம் பக்கத்தில்)

★ அகங்காரம் அகலும்போது அல்லலும் அகலுகிறது ★

# நன்றும்!

— "தாமரைத்தீவான்" —

1. ஈழத் தமிழ்த் திருநாட்டில் — உள்ள
எங்கள் கிழக்கு மாகாணத்தின் கண்ணே
வாழத்தகுங் காரைதீவில் — நன்கு
வாழ்சாமித் தம்பிக்கும் கண்ணம்மையாட்கும்

2. எங்கள் விபுலராநந்தர் — வந்தே
இருபத்தி ஏழ்மூன்று தொண்ணூற்றிரண்டில்
தங்க மயில்வாகனனாய் — இந்தத்
தாரணி உய்யப் பிறந்து வளர்ந்தார்!

3. செந்தமிழ் ஆங்கிலம் கற்றூர் — கற்று
சீரான பண்டிதர் பீயெஸ்ஸியானார்!
அந்தமிழ்த் தேசிகர் ஆனார் — ஆகி
அழகான கல்லடிப்பள்ளி திறந்தார்!

4. சென்னைத் தமிழகம் சென்றார் — சென்று
தேர்ந்த இசைத்தமிழ் ஆராய்ச்சி செய்தார்!
முன்னைப் பழந்தமிழ் யாழை — நூல்கள்
முழுவதும் ஆய்ந்தே எழுதி முடித்தார்!

5. இமயம் வரைசென்று வந்தார் — வந்து
இன்பக்கவிதைகள் கட்டுரை தந்தார்!
சமயம் தழைத்திடச் செய்தார் — தக்க
சமயத்திலன்றே சமாதியடைந்தார்!

6. ஈழம் இருக்கும் வரைக்கும் — எங்கள்
இன்பத்தமிழர் இருக்கும் வரைக்கும்
வாழும் தமிழ் உள்ளளவும் — அவர்
வாழ்வது மட்டும் வழிவழி உண்மை!

7. தங்கத் தமிழ்மகன் வாழ்க — வாழ்க
சங்கத்தமிழினைத் தந்தவன் வாழ்க!
எங்கள் விபுலனார் வாழ்க — நந்தன்
என்றென்றும் நீடூழி இந்நிலம் வாழ்க!

## இலங்கையில் முதன் முதலாகச் சிறப்புப்பெற்றவர்....

— விடைகள் —

1. ஜோர்ஜ் பேட்
2. சேர். முத்துக்குமாரசுவாமி
3. சேர். அருணாசலம்
4. V. துரைசாமிப்பிள்ளை
5. சேர். அருணாசலம்
6. பிரடெறிக் நோத்
7. D. S. சேனநாயக
8. ஸ்ரீமாவோ பண்டாரநாயக
9. வான் இம்மால்
10. யோன் யார்விஸ்
11. நிக்கலஸ் திசைவீரசிங்கம்
12. எவ். சி. கிறெமியர்
13. ஹெரால்சிங்கர்
14. பாலிங்
15. பேதுருப்பிள்ளை
16. ஆறுமுகநாவலர்
17. மோர்கப்பா
18. தம்பையா
19. செல்லப்பா
20. திருவாட்டி ஸ்கொட்
21. சேர். அருணாசலம்
22. சேர். இராமநாதன்


# நீம் சுகாதார தூபம்

மழைக்காலத்தோடு நுளம்பும் இலையானும் அதிகமாகப் பெருகி உபத்திரவம் தருகின்றன. இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்குப் புனிதத்தையும், கணகணப்பையும், லட்சுமி கடாட்சத்தையும் உண்டாக்கும்.




'மில்க்வைற்' நீம் சுகாதார தூபத்தை தணலில் இட்டுப் புகைத்துப் பாருங்கள். எவரும் வாங்கக் கூடியதாக **25** சதம் பெறுமதியான பைகளில் உண்டு.

★

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம்வர வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா.

நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய எமது உற்பத்திப் பொருள்களுக்கு உங்கள் அமோக ஆதரவு பெருகட்டும்.

மில்க்வைற் சோப் மேலுறைகளைச் சேகரித்துக் கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


மந்திரத்தைச் செபிக்கும்போது அதன் கருத்தைச் சிந்திக்குக.

— சுவாமி சிவானந்தர்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-11-79.